## தமிழ்நாடு தலைகுனியாது!

# ஓ.பன்னீர்செல்வம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



## மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவிப்பு!


| தேதி | நேரம் | தொகுதி | ஒன்றிய/நகர/பேரூர் | இடம் |
|---|---|---|---|---|
| மார்ச் 20 | காலை 9.00 மணி | ஆண்டிபட்டி | கடமலை–மயிலை ஒன்றியம், கூடலூர் நகரம் | பத்ரகாளியம்மன் கோவில் மண்டபம் கடமலை –மயிலை |
| மார்ச் 20 | மாலை 4.00 மணி | திருவில்லிபுத்தூர் (தனி) | திருவில்லிபுத்தூர் ஒன்றியம், எஸ்.கொடிக்குளம், மம்சாபுரம், வத்திராயிருப்பு பேரூர்கள் | இல்லத்து பிள்ளையமார் மண்டபம் திருவில்லிபுத்தூர் |
| மார்ச் 20 | இரவு 7.00 மணி | இராஜபாளையம் | ராஜபாளையம் ஒன்றியம், சேத்தூர் பேரூர் | இராஜபாளையம் |
| மார்ச் 21 | காலை 9.00 மணி | சிவகங்கை | காளையார்கோவில் ஒன்றியம் | எ.எஸ். கார்டன் காளையார்கோவில் |
| மார்ச் 21 | மாலை 4.00 மணி | திருப்பத்தூர் | திருப்பத்தூர் ஒன்றியம், சிங்கம்புணரி, நெற்குப்பை ஆகிய பேரூர்கள் | காந்திமதி மகால் சிங்கம்புணரி |
| மார்ச் 21 | இரவு 7.00 மணி | காரைக்குடி | தேவக்கோட்டை, சாக்கோட்டை கிழக்கு ஒன்றியங்கள் மற்றும் புதுவயல் பேரூர் | எஸ்.எம்.ஜி. மஹால் தேவகோட்டை. |

**விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு,
விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்,
சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன்,
தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன்
ஆகியோர் அறிவித்துள்ளனர்.**

## சென்னை கிழக்கு மாவட்டம்

# வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, வில்லிவாக்கம் கிழக்கு - மேற்கு பகுதி தேர்தல் பணிமனைகள் திறப்பு மற்றும் துறைமுகம் கிழக்கு பகுதி நிர்வாகிகள், BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, வில்லிவாக்கம் கிழக்கு/மேற்கு பகுதி தேர்தல் பணி மனைகள் திறப்பு மற்றும் துறைமுகம் கிழக்கு பகுதி நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் 20.3.2026, வெள்ளிக்கிழமை அன்று காலை நடைபெறும் விவரம் பின்வருமாறு:-

| நாள் | நிகழ்ச்சி / பகுதி | இடம் |
|---|---|---|
| 20.3.2026 வெள்ளி காலை 8.00 மணி | தேர்தல் பணிமனை திறப்பு வில்லிவாக்கம் கிழக்கு பகுதி | முருகு மகால் 2/1 தந்தை பெரியார் நகர் முதல் தெரு, அயனாவரம், சென்னை–23. (கோபி கிருண்ணா திரையரங்கம் அருகில்) |
| 20.3.2026 வெள்ளி காலை 8.30 மணி | தேர்தல் பணிமனை திறப்பு வில்லிவாக்கம் மேற்கு பகுதி | 5/16, 4வது பிரதான சாலை சிட்கோ நகர், வில்லிவாக்கம் |
| 20.3.2026 வெள்ளி காலை 10.00 மணி | துறைமுகம் கிழக்கு பகுதி நிர்வாகிகள், BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் | 106, அன்னை தெரசா பார்ட்டி ஹால், ஆச்சாரப்பன் தெரு (கோழி மார்க்கெட் அருகில்) |

மேற்கண்ட தேர்தல் பணிமனை திறப்பு மற்றும் BLA2, BDA, BYO ஆலோசனை கூட்டத்தில் அந்தந்த பகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## ஆர்.கர்னல் தலைமையில்

# 145 வது வட்டக் கழக நிர்வாகிகள்-பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் நெற்கை ப.ஆலன் அறிக்கை!

சென்னை, மார்ச்.20-
145 வது வட்ட நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் (BLA-2) கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து வட்ட செயலாளர் நெற்கை ப. ஆலன் அறிக்கை வருமாறு-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 145 வது வட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி இன்று (20.3.2026) வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் நெற்குன்றம் வட்டக் கழக செயலாளர் அலுவலகத்தில் பகுதி கழக அவைத் தலைவர் ஆர். கர்னல் தலைமையில் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் குறித்து ஆலோசிக்க உள்ளதால் நம்முடைய 145 வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA-2) அனைவரும் தவறாமல் பங்கேற்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு 145 வது வட்ட கழக செயலாளர் நெற்கை ப.ஆலன் தெரிவித்துள்ளார்.

# ஜவுளித்துறையில் வெற்று விளம்பரங்களில் நாட்களை ஓட்டும் ஒன்றிய அரசு!

## முன்னேற்றம் தரும் வகையில் எந்தத் திட்டமும் இல்லை – கே.இ.பிரகாஷ் எம்.பி. குற்றச்சாட்டு!



புதுடெல்லி, மார்ச் 20-
இந்தியாவின் ஜவுளி தொழில்துறையை நவீனப்படுத்தி முன்னேற்றுவதற்கு ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜவுளித்துறையிடம் கேள்வி எழுப்பினேன். இதில், ஜவுளி ஆராய்ச்சி அமைப்புகள் போன்ற உறுதுணை அமைப்புகளின் பங்களிப்பு இதுவரை என்ன என்றும் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலில் இருந்து, காகித அளவில் திட்டங்களை வகுத்துவிட்டு நடைமுறையில் எந்த மாற்றத்தையும் செய்யாமல் இருப்பது உறுதியாகியுள்ளது.

1. பலனளிக்காத கவர்ச்சிகர விளம்பர திட்டங்கள்:

இந்திய ஜவுளி தொழில்துறையை மேம்படுத்த ‘5F Vision’ திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக ஒன்றிய அரசு கூறியுள்ளது. ஆனால், இது, கேட்பதற்கும் கற்பனைக்கும் நன்றாக இருக்கும் கவர்ச்சிகர விளம்பர திட்டம் மட்டுமே. ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்றால், ஜவுளித்துறையின் முதுகெலும்பாக விளங்கும் விசைத்தறி மற்றும் கைத்தறித் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு, மானியங்கள் என எதையும், இந்த விஷன் உறுதிப்படுத்தவில்லை.

மேலும், பெருமளவு அதிகரித்துள்ள நூல் விலையேற்றம் போன்றவற்றால் அவதியுறும் ஜவுளி நிறுவனங்களை மீட்கவும் எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை.

2. PM MITRA திட்டமும் வெற்று அறிவிப்பு மட்டுமே:

PM MITRA திட்டத்தின் மூலம் தொழிற்பூங்காக்கள் மற்றும் புதிய தொழில்நுட்பக் கட்டமைப்புகள் உருவாக்கப்படுவதாக ஒன்றிய அரசு கூறியுள்ளது. இதன் மூலம் ஜவுளித்துறை மேம்படுவதாக சொல்லியுள்ளது.

ஆனால், இதுவும் நடைமுறையில் ஜவுளி முன்னேற்றத்திற்கு சரியாக இன்னும் பயன்படாத திட்டமே. ஜவுளி கூட்டமைப்பு களுக்குத் தேவையான நவீன இயந்திரங்களில் பற்றாக்குறை மற்றும் தரப்பரிசோதனை மையங்களை அமைப்பதில் மெத்தனம் என, இதில் நிலவும் தீர்க்கப்படாத சிக்கல்கள் ஏராளம்.

3. தமிழ்நாட்டைப் பார்த்து ஒன்றிய அரசு பாடம் கற்க வேண்டும்:

ஒன்றிய அரசிடம் இருந்து முறையான நிதி ஒதுக்கீடு கிடைக்காத போதும், தொலைநோக்கான திட்டங்கள் மற்றும் சுறுசுறுப்பான நடவடிக்கைகளால், தமிழ்நாட்டை ஜவுளி உற்பத்தியில் வெற்றி நடை போட வைத்துக் கொண்டிருக்கிறார், தமிழ்நாடு முதலமைச்சர்.

‘திராவிட மாடல்’ ஆட்சியின் 4 ஆண்டுகளில் ஜவுளி ஏற்றுமதி 29% வளர்ச்சியை அடைந்துள்ளது. இதோடு, குஜராத்தையும் மகாராஷ்டிராவையும் பின்னுக்குத் தள்ளித் தமிழ்நாடு முதலிடத்தையும் எட்டியுள்ளது.

வெற்று விளம்பரத் திட்டங்களை முன்னிறுத்தி ஏமாற்றாமல், தமிழ்நாட்டை பின்பற்றி, நாடு முழுக்க ஜவுளித்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் ஒன்றிய அரசு.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



சோஷியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆஃப் இந்தியா (SDPI) கட்சி சார்பில், இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற மத நல்லிணக்கத்தைப் போற்றும் புனித ரமலான் (இஃப்தார்) நோன்பு திறப்பு நிகழ்ச்சியில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி பங்கேற்று சிறப்புரையாற்றினார். நிகழ்வில் SDPI கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், இராயபுரம் மேற்கு பகுதி கழக செயலாளர் வ.பெ.சுரேஷ் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் உடனிருந்தனர்.





சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சைதை மேற்கு பகுதியில் 139, 139 (அ), 140, 140 (அ), 142, 142 (அ), ஆகிய வட்டங்களில் வெல்லும் தமிழ்பெண்கள் ஸ்டாலின் மகளிர்படை, வாக்குசாவடி நிலைய முகவர்கள் BLA (2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA), பூத் ஒருங்கிணைப்பாளர்கள் (BYO) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார். உடன் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடிஎல்லப்பன், பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, ஆர்.ரமேஷ், த.சம்பத், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், கலை இலக்கிய பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் சைதை சாதிக், தகவல்தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் நா.மணிகண்டன் வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# செஞ்சியில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, மார்ச் 20–
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புனித ரமலான் சமூகநல்லிணக்க இஃத்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டார ஜமாத் தலைவர் சையத் அப்துல் மஜித் பாபு தலைமை தாங்கினார். பாலகணேஷ் ஐயர், திருமுருகன் அடிகளார், கன்மலை கிருத்துவ ஆலயத்தின் அருள் தந்தை ஜான் சக்தி கிருபை நாதன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு புனித ரமலான் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா ,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மொடையூர் துரை, பச்சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்தீபன், செல்வி ராமசரவணன், அன்புசெழியன், பேரூர் செயலாளர் கார்த்திக், விழுப்புரம் வடக்கு மாவட்டகாங்கிரஸ் கட்சியின் தலைவர் ரங்க பூபதி, கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி மாதவன்,தே.மு.தி.க. மாவட்டப் பொருளாளர் தயாநிதி, வி.சி.க. ராஜாராமன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், வர்தகர் சங்கத் தலைவர் செல்வராஜ், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள்,அனைத்து தோழமைக் கட்சி நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

முகமது அஷ்ரப் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நகர விவசாய அணி அமைப்பாளர் ஜான்பாஷா நன்றி கூறினார்.

## வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி 23 ‘அ’ வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள் கூட்டம்!

## புழல் எம். நாராயணன் ஆலோசனைகள் வழங்கினார்!

மாதவரம், மார்ச்.20-
சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 23 ‘அ’ வட்டக் கழகத்தின் நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கூட்டம் காவாங்கரை கே.எஸ். நகர் பகுதியில் உள்ள முத்தமிழ்அறிஞர் கலைஞர் நற்பணி மன்றத்தில் நடைபெற்றது.

23 ‘அ’ வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன் முன்னிலையிலும், வட்ட அவைத் தலைவர் அ.ராமச்சந்திரன் தலைமையிலும் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும், தொடர்ந்து வெற்றி பெறுவதற்கான வழிவகைகள் குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். இறுதியாக வட்ட கூட்டத்தில் வருகின்ற 2026 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏழாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்க செய்வது எனவும், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இரண்டாவது முறையாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அரியணை ஏற்ற அயராது பாடுபடுவது எனவும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

தமிழ்நாட்டு மக்களுக்கு திராவிட மாடல் ஆட்சியின் மூலம் தொடர்ந்து மகளிர் காண அரசாக பல்வேறு நலத் திட்டங்களை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வட்ட கழகத்தின் சார்பில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள் பி.சுதாகர், அம்மு மூர்த்தி, டி.பார்பன், பி.முத்துகிருஷ்ணன், வி.ஹரி, மகளிர் அணி நிர்வாகிகள் எம். அமுதா, எஸ்.கலைச்செல்வி, ஆர்.சுதா, ஆர்.ஜெயபாரதி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சாந்தகுமார், தகவல் தொழில் நுட்ப அணி சித்ரா, லாரன்ஸ் வினோத், பிரேம், குமார், சுவாமிநாதன், கார்த்திக், சுகன், தேவராஜ், உதயா, யுவனேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கூட்டத்தில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு இரண்டாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்க சிறப்பாக பணியாற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார். வட்டச் செயலாளர் வி.ஆர்.குப்பன், முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் வட்ட அவை தலைவர் அ.ராமச்சந்திரன், வட்ட நிர்வாகிகள் பி.சுதாகர், அம்மு மூர்த்தி, டி.பார்பன், பி.முத்துகிருஷ்ணன், வி.ஹரி, எம்.அமுதா, எஸ்.கலைச்செல்வி, ஆர்.சுதா, ஆர்.ஜெயபாரதி, சாந்தகுமார், சித்ரா, லாரன்ஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக கூட்டம் பகுதி பொருளாளர் கே.டி.ரவி தலைமையில் நடைபெற்றது. சோழிங்கநல்லூர் மத்திய பகுதி கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் ஆலோசனை வழங்கினார்.